www.tamilarangam.net

**1995.04.06 அன்று அவசரகாலச் சட்ட விவாதத்தின் போது ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.**

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இந்த சபையிலே நானும் சக தமிழ் பேசும் உறுப்பினர்களும் பல தடவைகள் உரையாற்றி இருக்கிறோம்.

இனப்பிரச்சனை விடயத்தில் அர்த்தமுள்ள அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமென்பதை அனைவரும் வலியுறுத்தியும் இருக்கிறோம். எமது யோசனைகளையும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பித்தும் இருக்கிறோம்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படும் வரை யுத்த அபாயம் நம்மை அச்சுறுத்திக் கொண்டு தான் இருக்கும். மோதல் தவிர்ப்பாக இருந்தால் என்ன, போர் நிறுத்தமாக இருந்தால் என்ன அவையெல்லாம் புயலுக்கு முந்திய அமைதியைப் போல இருக்கும்.

அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை பெறவேண்டுமானால் இனப்பிரச்சனைக்கான மிகச் சிறந்த தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் கடந்த காலத்திலே தமிழ் பேசும் மக்களை ஐக்கிய இலங்கை கோட்பாட்டின் மீது நம்பிக்கை இழக்கச் செய்த காரணிகளை வேரோடு களைந்தெறிய ஆக்க பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

துரதிஷ்டவசமாக அவ்வாறான முயற்சிகள் போதுமான அளவுக்கு இல்லையென்பதை சுட்டிக்காட்ட வேண்டி இருக்கிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

தமிழ் மாணவர்களும், இளைஞர்களும் ஆயுதப்போராட்டத்தின் மீது நம்பிக்கை கொள்ளுவதற்கு தரப்படுத்தலே முக்கிய காரணமாக அமைந்தது. கல்வி வாய்ப்பு மீது என்று கை வைக்கப்பட்டதோ அன்று தான் தமிழ் மாணவர்கள் விரக்தியின் விளிம்புக்கு சென்றார்கள். ஆயுதப் போராட்டம் தமிழ் மாணவர் பேரவையின் ஊடாகத் தான் வெளிப்பட்டது என்பதையும் அதன் தொடர்ச்சி தான் ஆயுதப் போராக மாறியது என்பதையும் நான் இங்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அதனை எதிர்த்து அகிம்சை வழியில் தான் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் தமிழர்களின் கல்வி வாய்ப்பிலே கை வைத்த போது தான் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது.

மாணவர்களும், இளைஞர்களும் தங்கள் நியாயமான உரிமைகள் மறுக்கப்படும் போது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்று கோபப்படுவார்கள், கொதிப்படைவார்கள்.

மாணவர்களும், இளைஞர்களையும் அவர்களது நியாயமான உணர்வுகளையும் அலட்சியப்படுத்தும் போது தான் நாடுகள் நெருக்கடிகளை சந்திக்கின்றன. நமது நாட்டுக்கும் அது பொருந்தும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இனப்பிரச்சனை தோன்றியதற்கு யார் காரணம் என்று ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் வாதம் செய்வதால் ஆகப்போவது ஒன்றுமில்லை. யார் காரணம் என்பதை விட இனப்பிரச்சனை தோன்றியதற்கான காரணிகளை அறிவது முக்கியமானதாகும்.

இது தான் வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளும்முறையாகும். கடந்த கால வரலாற்றை விட சிறந்த ஆசிரியர் எமக்கு கிடைக்க முடியாது. ஆனால் அநத ஆசிரியர் சொல்லுவதை செவி கொடுத்துக் கேட்காத கேட்காத மாணர்களாகத் தான் நாம் இருந்து கொண்டு இருக்கிறோமா என்று சந்தேகம் வருகிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே !

தமிழ் பேசும் மாணர்களின் அபிலாசைகளும், கல்வி உரிமையையும் தற்போது மறுக்கப்பட்டு கொண்டு இருக்கும் இரண்டு முக்கிய விடயங்களை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வடபகுதி மாணர்களின் கல்வி வளர்ச்சியை யுத்தம் பட்டமரமாக்கி இருக்கிறது. போதிய ஆசிரியர்கள் கிடையாது. கல்விக் கூடங்களிலே தளபாடப்பற்றாக்குறை அடிக்கடி வானத்தில் வட்டமிடும் குண்டுவீச்சு விமானங்களின் ஓசையைக் கேட்டு கல்விக் கூடத்தை விட்டு பதுங்கு குழியைத் தேடி ஓட வேண்டிய நிலை. புலிகளின் விழாக்களுக்குதோரணம் கட்டவும். புலிகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு கண்டிப்பாகப் போயே ஆக வேண்டிய சூழ் நிலை. இத்தனை தடைகளையும் தாண்டி மாலை நேரத்திலே பின்னர் வீட்டில் இருந்தாவது படிக்கலாம் என்றால் மின்சாரம் கிடையாது. குப்பி விளக்கில் படிப்பதற்கு கூட விலை உயர்ந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருக்கும் மண்ணெண்ணெயை எட்டிப்பிடிக்க முடியாது. அதனால் மண்ணெண்ணெயிலே பஞ்சை நனைத்து அதை ஒரு குப்பிக்குள் வைத்து அதன் மூலம் விளக்கை எரிய வைத்து படிக்க வேண்டிய நிலை வட பகுதியிலே உள்ள மாணவர்களுக்கு உள்ளது. அந்த மாணவர்களை நோக்கித் தான் வெட்டுப்புள்ளி பாய்ந்திருக்கிறது. பனையேறி விழுந்தவனை மாடேறி மிதிப்பதைப் போல இந்த வெட்டுப்புள்ளி முறை இருக்கிறது.

இங்கு வேடிக்கையானதும் பரிதாபகரமானதும் யாதெனில் பரீட்சை முடிந்து புள்ளி விபரங்கள் வெளிவந்த பின்பு தான் பல்கலைக் கழக அனுமதிகளை தீர்மாணிக்கின்றனர் இதனால் பரீட்சைக்கு முன்னர் மாணவர்கள் அவதியுறுகின்றனர்.

சென்ற அரசாங்கம் விட்ட தவறுகள் என்னவென்று புதிய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக செய்திகள் வருகின்றன. ஆனால் தமிழ் பேசும் மக்களைப் பாதித்த நடைமுறைகளை கண்டறிந்து அவற்றை அகற்றுவதற்கு மட்டும் முயற்சி எடுக்கப்படவில்லையே என்று தமிழ் பேசும் மக்கள் பேசிக் கொள்ளும் நிலை தான் இருக்கிறது.

கடந்த காலத்திலே காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளை நடத்த ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமித்திருக்கிறது. கடந்த காலத்தில் இந்த நாட்டில் இருந்து சமாதானத்தை காணாமல் போகச் செய்த பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பதும் மிக முக்கியமானதாகும். அவ்வாறான பிரச்சனைகளில் ஒன்று தான் தமிழ் பேசும் மாணவர்களின் கல்வி உரிமை மறுக்கப்படுவதும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வட பகுதி மாணவர்கள் எதிர் நோக்கும் வெட்டுப்புள்ளி முறையை அகற்றுவதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

மற்றொரு முக்கிய பிரச்சனை கிழக்கு மாகாணத்தில் மாணவர்கள் எதிர் நோக்கும் பல்கலைக்கழக பிரச்சனை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் வர்த்தக கலைப்பீடங்களை வந்தாறுமூலையில் இருந்து மட்டக்களப்புக்கு மாற்றப் போவதாக செய்தியொன்று வெளியாகியது. மேலும் வேறு சில பீடங்களையும் எதிர்காலத்தில் மாற்றுவதாகவும் அந்த செய்தியில் காணப்பட்டது. இச் செய்தியில் 23.03.95 அன்று தினகரன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

இதே வேளையில் 04.04.95 அன்று வெளியான செய்தியில் அது தவறான தகவல் என்று கூறப்பட்டு இருக்கிறது. இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சரிடம் இருந்து விளக்கம் ஒன்றை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

கிழக்குப் பல்கலைக் கழகத்தை கூறுபோடுகின்ற முயற்சி எக்கட்டத்தில் மேற் கொள்ளப்பட்டாலும் அது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதேயாகும். கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு வந்தாறுமூலையிலே பாரிய நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றான அதனை மாற்றுவதற்குரிய வாய்ப்பும் அங்கே இருக்கிறது. வசதிகள் மட்டுமே செய்து கொடுக்கப்பட வேண்டும்.

நிலமை இவ்வாறு இருக்கின்ற போது கிழக்கு பல்கலைக் கழகத்தின் சில பீடங்களை தூக்கிக் கொண்டு போகப் போகிறார்கள் என்ற செய்தி அந்த மாணவர்களிடையே எதிர்ப்பையும், விரக்தியையும் ஏற்படுத்தியது. புறாக்களுக்கு அங்கங்கே தானியங்களை வீசுவது போல பலகலைக்கழகப் பீடங்களை பிரித்து அங்கங்கே போடவது பல்கலைக்கழக முறையை கேலிக்கூத்தாக்கிவிடும்.

கிழக்கிலே அவ்வாறான ஒரு நடவடிக்கை எடுக்கப்படுமானால் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகப் பீடங்களையும் அவ்வாறு மாற்றுவதற்கான முன்னுதாரணமாக அமைந்து விடும். எனவே தான் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை எக்கட்டத்திலும் அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது என்று எமது கட்சி கேட்டுக்கொள்ளுகிறது. கிழக்குப் பல்கலைக் கழகம் நாட்டில் இடம் பெற்ற வன்செயல்களைக் காரணம் கூறியே வளர முடியாமல் தடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர கட்டடங்கள் கிடையாது. மூலக ஆய்வுகூட வசதிகள் கிடையாது. மாணவர்கள் தங்குவதற்குரிய சிறந்த விடுதி வசதிகள் கிடையாது. இந்த வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

www.tamilarangam.net



இவற்றைவிட மலையக தமிழ் மாணவர்களை பாதிக்கின்ற கல்வி தொடர்பான பிரச்சனை ஒன்றையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

மலையக தமிழ் பேசும் மாணவர்களது கல்வி வளர்ச்சி கருதி கட்டியமைக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி விடயத்திலும் இழுபறிநிலை தான் இருக்கிறது.

மலையக தமிழ் பேசும் மாணவர்களுக்காக ஜெர்மன் நிறுவனமொன்றால் அக் கல்லூரி கட்டித்தரப்பட்டது.

தற்போது வெளிப்பிரதேச மாணவர்களும் அங்கு இடமளிக்கப்பட முயற்சிக்கப்படுகிறது.

மலையகத்தின் கல்வி வளர்ச்சி பின்தங்கிய நிலையில் இருக்கிறது. மலையக மாணவர்கள் மத்தியில் இருந்து கல்விமான்களை உருவாக்கும் களங்களில் ஒன்றாக ஸ்ரீபாத கல்லூரி விளங்க வேண்டும். இதனைத் தான் மலையக மாணவர்களும் அங்குள்ள அமைப்புகளும் விரும்புகின்றன.

மலையக மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஸ்ரீபாத கல்லூரியை மலையக மக்களுக்கானதாக அரசாங்கம் மாற்றிட வேண்டும்.

வடக்கு - கிழக்கில் சமாதானத்தை தோற்றுவிக்க இன்று நாம் கொடுத்துவரும் விலை கொஞ்ச நஞ்சமல்ல. மலையகத்திலும் அமைதியை குலைப்பதற்கான விதைகளை நாம் போட்டு விடக்கூடாது.

கௌரவ சபசநாயகர் அவர்களே!

வடக்கு - கிழக்கில் குறிப்பாக கிழக்கில் திட்டமிட்ட வெளியாரின் குடியேற்றங்கள் பற்றி நாமும் சக தமிழ் பேசும் அமைப்புக்களும் கண்டனங்களைத் தெரிவித்தே வந்திருக்கிறோம்.

தற்போது வடக்கு - கிழக்கிலே இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் தமது சொந்தப் பகுதிகளில் மீளக்குடியேற்றும் தேவையை அரசும் உணர்ந்திருக்கிறது.

ஆனால், மீளக்குடியேறும் தமிழ் பேசும் மக்கள் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது.

திருகோணமலை லிங்கநகர் என்னுமிடத்தில் மீளக்குடியேறியுள்ள 40 தமிழ் குடும்பங்களை வெளியேற்றுவதில் அரசாங்க அதிபர் தீவிரமாக இருக்கிறார்.

திருகோணமலை அரசாங்க அதிபர் குறித்து அங்குள்ள தமிழ் பேசும் மக்கள் ஏற்கனவே அதிருப்தி அடைந்துள்ளனர்.

தமிழ் நாட்டில் இருந்து வந்த அகதிகள் விடயத்தில் சட்டம் என்ற போர்வையில் அவர் முரட்டுத்தனமாக நடந்திருக்கின்றார்.

அதே அரசாங்க அதிபர் லிங்கநகரில் குடியேறியுள்ள தமிழ் குடும்பங்களை புல்டோசரால் இடித்து வெளியேற்றுவேன் என்று கூறியிருப்பதாக அறிகிறோம்.

திருகோணமலையில் அரசாங்க காணிகளிலும், தனியார் காணிகளிலும் வெளியார் குடியேற்றங்கள் இன்று நேற்றல்ல நீண்டகாலமாக நடைபெற்று வருகிறது.

திருகோணமலை பிரதேச செயலகத்தில் விசாரித்தால் அத்துமீறிய குடியேறிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பற்றிய தகவல்களை அறிய முடியும்.

அவ்வாறு இருக்கும் போது லிங்கநகரில் மட்டுமே இடித்து தள்ளுவோம் என்று கூறுவது ஏன் என்று தான் கேட்கிறோம். வன்செயல்களுக்கு முன்னர் அக்காணிகளில் குடியிருந்தவர்கள் அக்குடும்பங்கள் அது மட்டுமல்லாமல் அவர்கள் திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

சட்டம் என்று பார்த்தால் அது எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.

அரசாங்க காணிகளிலும், தனியார் காணிகளிலும் குடியேறியுள்ள வெளியாரை அகற்றிவிட்டு பின்னர் திருகோணமலையைச் சேர்ந்த குடும்பங்களிடம் சென்றால் அதில் நியாயம் இருக்கிறது என்று சொல்லலாம்.

அவ்வாறு செய்யாமல் சட்டம் இன அடிப்படை பார்த்துத்தான் பயன்படுத்துமானால் சட்டத்தின் நியாயத்தன்மை கேள்விக்குரியதாகிவிடும்.

தற்போது லிங்கநகரில் குடியேறியுள்ள 40 தமிழ் குடும்பங்கள் விடயத்தில் மட்டுமே சட்டத்தை கண்டிப்பாக பிரயோகிக்க அரசாங்க அதிபர் விரும்புவது ஏன் என்று தெரியவில்லை.

இன ஒற்றுமைக்காக நாம் முயன்று கொண்டிருக்கும் போது சில அதிகாரிகள் இன்னமும் திருந்த மறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

லிங்கநகரில் மீளக்குடியேறியுள்ள தமிழ் குடும்பங்களை வெளியேற்றும் முயற்சியை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்று காணி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனவிரோத உணர்வோடு செயற்படும் அதிகாரிகள் விடயத்திலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

தமிழ் பேசும் மக்களது அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் கூட இடையிலே தடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் உத்தரவுகள் கூட அலட்சியம் செய்யப்படுவதில் ஏதோ ஒரு உள்நோக்கம் இருப்பதாகவே நாம் நினைக்க வேண்டியிருக்கிறது.

பொருளாதார தடையை தளர்த்தியது அரசு. அந்த அறிவிப்பு வேகமாக பரவிய அளவுக்கு தடை செய்யப்பட்ட பொருட்கள் மக்களை சென்றடைவதில் வேகத்தைக் காணமுடியவில்லை.

தாண்டிக்குளத்தில் அரசின் இராணுவம் தான் பாதுகாப்பு பணியில் இருக்கிறது. ஆனால் அரசாங்கத்தின் பணிப்புரையின்படி அங்கே காரியங்கள் நடக்கிறதா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

கெடுபிடிகளும், புதிய விதிகளும் தாண்டிக்குளத்தில் மறைமுகமாக பொருளாதாரத் தடையை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் அரசின் நல்லெண்ண முயற்சிகள் கூட வடபகுதி மக்களால் அனுபவித்து உணரமுடியாத நிலைதான் இருக்கிறது.

அரசாங்கம் நீட்டும் நேசக்கரம் தாண்டிக்குளத்திற்கு அப்பால் நீள முடியாதவாறு ஒரு சூழல் இருக்கிறது.

அதே வேளை இது தொடர்பாக எமது ஆலோசனை ஒன்றையும் இங்கு முன்வைக்க விரும்புகிறோம். வவுனியாவில் அல்லது கொழும்பில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு லொறிகளில் ஏற்றப்பட்டு சீல் வைக்கலாம் அதன் பின் அவர்களது மேற்பார்வையின் கீழ் அவ்வாகனங்களின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். இவ்வாறான நடைமுறைத் தாமதங்கள் மற்றும் முட்டுக்கட்டைகளை குறைப்பதோடு துஷ்பிரயோகங்களை முற்றாக அகற்ற வழிவகுக்கும்.

இந்த விடயத்தை தீர விசாரித்து ஆணை செய்ய வேண்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பேச்சுக்களை விட செயல் பூர்வமான முன்முயற்சிகளே சமாதானத்தின் மீது பற்றுதியை ஏற்படுத்தும். அதற்கான முயற்சிகளில் அரசாங்கம் உளப்பூர்வமாக முயலவேண்டும். அதற்கு எமது ஆதரவு உண்டு. என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.